டெல்டா விவசாயிகளுக்கு உதவுமா வேளாண் துறை?

First Published : 26 Aug 2010 01:33:26 AM IST



கடலூர் அருகே பாரம்பரிய முறையில் தயாரான நெல் நாற்றுகளை, நிலத்துக்கு எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டு இருக்கும் விவசாயத் தொழிலாளர்கள். படம்: வி. சி

கடலூர்: டெல்டா பாசன விவசாய நிலங்களில் போதுமான தண்ணீர் இருந்தும் சம்பா சாகுபடி பணிகள் இன்னமும் தொடங்கப்படவில்லை.

16 லட்சம் ஏக்கர் காவிரி டெல்டா பாசன விவசாயிகள், தங்களது பாரம்பரிய முறைகளையே நம்பியுள்ளனர். மேட்டூர் அணை திறந்தால்தான் சேற்றில் கால்வைக்க முடியும் என்ற நிலை பன்னெடுங்காலப் பழக்கம். டெல்டா பாசனப் பகுதிகளில் குறிப்பாகக் கடலூர், நாகை, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிகமாக தென்மேற்குப் பருவமழை பெய்துள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் திறந்தால் எந்த அளவுக்கு தண்ணீர் தேங்குமோ, அந்த அளவுக்கு மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். கடந்த 10 தினங்களுக்கு மேலாக இந்த நிலை நீடிக்கிறது. மழை காரணமாக மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டு உள்ளது.

ஆனால் சம்பா நெல் சாகுபடிப் பணிகள் இன்னமும் தொடங்கப்படவில்லை. கோடை உழவும் பெரும்பாலான நிலங்களில் நடைபெறவில்லை என்கிறார்கள் விவசாயிகள்.

ஆடிப் பட்டம் தேடிவிதை என்பது பழமொழி. இந்த ஆண்டு ஓரளவுக்கு நல்ல மழை பெய்து இருக்கும் நிலையில், பாரம்பரிய விவசாயிகள் ஆடிப்பட்டம் தொடங்கும் ஆகஸ்ட் முதல் வாரத்திலாவது வேளாண் பணிகளைத் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால் தொடங்கவில்லை. இனி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, மீண்டும் வாய்க்கால்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிய பின்னர்தான் வேளாண் பணிகள் தொடங்கப்படும் என்றால், டெல்டா பாசனப் பகுதிகளில் சம்பா நாற்று நடவுப் பணிகள் அக்டோபர் கடைசியில்தான் முடிவடையும். பிப்ரவரி மாதத்துக்கு

மேல்தான் சம்பா அறுவடை. இடையில் வடகிழக்குப் பருவமழையின் தாக்கத்தையும் சந்திக்க நேரிடும்.
ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மழை திருப்தியாக இருந்தும், சம்பா சாகுபடிப் பணிகள் பிந்திப் போவதும், சம்பாவுக்குப் பின் 10 லட்சம் ஏக்கரில் உளுந்து பயிரிட முடியாமல் போவதும், வேளாண்துறை டெல்டா விவசாயிகளுக்கு முறையான அறிவிப்புகளை வெளியிடாததும், பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ப விவசாயத்தை மாற்றிக் கொள்ள, விவசாயிகளைத் தயார் செய்யாததுமே காரணம் என்று, முன்னோடி விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.
முன்பெல்லாம் சம்பா நெல் என்றால் குறைந்தபட்சம் 6 மாதப் பயிர். இன்று 6 மாத விவசாயத்துக்குத் தண்ணீர் கிடைப்பது இல்லை. விவசாயிக்கும் பொறுமை இல்லை. எனவே குறுகியகால நெல் ரகங்களை வந்துவிட்டன. ஆனால் பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப அவற்றையாவது காலாகாலத்தில் பயிரிட்டு, நல்ல மகசூலுக்கு வழிவகுக்கப்படுகிறதா என்றால், இல்லை என்கிறார்கள் விவசாயிகள்.
இந்த ஆண்டு மழை எப்படி இருக்கும் எப்போது சம்பா சாகுபடியைத் தொடங்கலாம், எந்தரக நெல்லை விதைக்கலாம், மேட்டூர் அணை நீர் எத்தனை நாளுக்குக் கிடைக்கும் என்ற எந்த அறிவிப்பையும் வேளாண்துறை வெளியிடவில்லை என்கிறார்கள் டெல்டா விவசாயிகள்.
இந்த ஆண்டு ஆகஸ்ட் 20ல் வடகிழக்குப் பருவமழை தொடங்கும் என்று வானிலை ஆய்வுமையம் அறிவித்தது. அதன்படி மழை பெய்யத் தொடங்கி இருக்கிறது. வானிலை ஆய்வுமைய அறிவிப்புக்கு ஏற்ப விவசாயிகளைத் தயார் படுத்தும் பணியை மேற்கொள்ள வேண்டியது வேளாண் துறையின் பொறுப்பு. ஆனால் அதைச் செய்ய வில்லையே என்கிறார் முன்னோடி விவசாயியும், மாவட்ட உழவர் மன்றக் கூட்டமைப்பின் தலைவருமான பி.ரவீந்திரன்.
பன்னாட்டு இயற்கை பேரிடர் மேலாண்மை முகமை என்ற தொண்டு நிறுவனம், வானிலை ஆய்வு மையங்களுடன் இணைந்து, விவசாயிகளுக்கு வானிலை முன்னறிவிப்புகளையும் ஆலோசனைகளையும், 17 நாடுகளில் வழங்கி வருகிறது. இந்த முகமை தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பாசனப்பகுதிகளுக்கு இந்த ஆலோசனைகள் வழங்கும் பொறுப்பை அண்மையில் ஏற்றுக் கொண்டு இருப்பதாகவும் ரவீந்திரன் கூறினார். இனியாவது டெல்டா விவசாயத்தில் மாற்றம் ஏற்படுமா?

**சிறுதானியங்கள் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி முறைகள்...**

First Published : 26 Aug 2010 12:00:00 AM IST

விழுப்புரம் : சிறுதானிய அறுவடை காலமான தற்போது அவற்றை எப்படி பாதுகாப்பது என்பது குறித்து வேளாண் அலுவலர் இரா. பெரியசாமி தெரிவித்துள்ளார்.
அவரது அறிக்கை: விழுப்புரம் வட்டத்தில் கோலியனூர், சோழனூர், ஆசாரங்குப்பம், மேல்பாதி, கல்லப்பட்டு ஆகிய கிராமங்களிலும், விக்கிரவாண்டி வட்டம், காணை வட்டம், கண்டமங்கலம்

வட்டம் உள்ளிட்ட பகுதிகளில் கம்பு, ராகி போன்ற சிறு தானியங்கள் அறுவடை நடைபெற்று வருகிறது.

சிறு தானியங்களாகிய கம்பு, ராகி ஆகியவற்றில் உள்ள மாவுச்சத்து மற்றும் புரதச் சத்தின் அளவைப் பொறுத்தே கூடுதல் விலை கிடைக்கிறது. சிறுதானியங்களை கூடுதல் விலைக்கு விற்றிட கீழ்க்காணும் அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கதிர்கள் முதிர்ந்து இலைகள் பழுப்பு நிறமாக மாறியவுடன் கதிர்களை மட்டும் தனியாக அறுவடை செய்ய வேண்டும். மழை நேரங்களில் அறுவடை செய்தால் பூஞ்சாணம் தாக்கிய கதிர்களை தனியே பிரித்து காயவைக்க வேண்டும். காயவைத்த கதிர்களிலிருந்து மணிகளை பிரித்து எடுக்க கதிர் அடிக்கும் கருவிகள் அல்லது கல் உருளைகளை பயன்படுத்தி தானியத்தைப் பிரிக்க வேண்டும்.

பிரித்து எடுக்கப்பட்ட மணிகளை காற்றில் தூற்றிவிட்டு அதில் கலந்துள்ள இலைகள், சருகுகள் ஆகியவற்றை நீக்க வேண்டும். விதைகளில் கல் மண் இதர தானியங்கள் மற்றும் உடைந்த தானியங்களை தனியாகப் பிரித்து நீக்கிவிட வேண்டும்.

சிறு தானியங்களை நன்கு காயவைத்து நிழலில் உலரவிட்டு, பின்னர் சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி சேமிக்க வேண்டும். உட்பக்கம் சவ்வுத்தாள் பொருத்திய சாக்குப் பைகளில் தானியங்களை சேமித்தால் மழைக்காலங்களில் ஈரக்காற்றினால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும்.

அதிக காலம் சேமிக்க வேண்டியிருப்பின், தானியங்களை சேமிப்பு கலன்களில் இட்டு சேமிக்க வேண்டும். காய வைத்த தானியங்களை, சேமித்து வைக்கும்போது மாதம் ஒரு முறை வெயிலில் காயவைத்து ஆறவிட்டு சேமிப்பது முக்கியம், இல்லாவிடில், வண்டுகள் தாக்கி தரம் பாதிக்கப்படும். இதனால் நல்ல விலை கிடைக்காது என்று பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**அரக்கோணம் அருகே ஏரி மதகில் உடைப்பு: விவசாயிகள் கலக்கம்**

First Published : 25 Aug 2010 02:38:31 PM IST

அரக்கோணம், ஆக.24: அரக்கோணம் அருகே காவனூர் ஏரியில் மதகு உடைபெடுத்து நீர் வெளியேறுவதால் கார்த்திகை பட்டத்துக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுமோ என விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

அரக்கோணத்தை அடுத்துள்ளது காவனூர் ஏரி. இந்த ஏரியின் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. நெல், நிலக்கடலை உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் இப்பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த ஏரியின் வடக்கு மதகு சில ஆண்டுகளுக்கு முன் உடைந்த போது பொதுப்பணித்துறையின் ஏரிகள் கோட்டப் பிரிவினர் மணல் மூட்டைகளைப் போட்டு தாற்காலிகமாக அடைத்தனர்.

தற்போது பெய்த மழையினால் இந்த ஏரியில் 75 சதவீதம் நீர் நிரம்பியுள்ளது. இந்நிலையில் கடந்த இரு தினங்களாக ஏரி மதகில் உடைப்பு ஏற்பட்டு அதிக அளவு நீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது.

இதனால் கார்த்திகை பட்டத்துக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுமோ என அஞ்சிய கிராமத்தினர் உடைப்பை சரி செய்ய முயன்றனர். இருந்தும் நீர் அதிக அளவில் வெளியேறி வருகிறது. மேலும் இந்த உடைப்பால் கரைக்கும் பாதிப்பு ஏற்படுமோ என அவர்கள் அச்சத்தில் உள்ளனர்.

இது குறித்து அரக்கோணத்தில் உள்ள தமிழக அரசு பொதுப்பணித்துறையின் ஏரிகள் கோட்ட இளநிலை பொறியாளர் அலுவலகத்துக்கு தகவல் கொடுத்தும் இது வரை நடவடிக்கை இல்லையாம்.

எனவே மதகு உடைப்பை சரி செய்ய பொதுப்பணித்துறை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

**காளான் வளர்ப்புப் பயிற்சி முகாம் நிறைவு விழா**

First Published : 25 Aug 2010 01:19:16 PM IST

பெரம்பலூர், ஆக. 24: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் காளான் வளர்ப்பு மற்றும் உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன் பேசியது:

தந்தை ஹேன்ஸ் ரோவர் கலைக் கல்லூரி, ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், நுண்ணுயிரியல் துறை இறுதியாண்டு மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு, உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் கடந்த ஒரு மாதமாக அளிக்கப்பட்டது.

இதில் காளான் குறித்தும், அதன் வகைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் பங்கேற்ற மாணவர்கள் சுயதொழில் தொடங்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் அளிக்கப்பட்டது. மேலும், காளான் வளர்ப்பு குறித்த கையேடு வெளியிடப்பட்டது.

இதில் கல்லூரி இயக்குநர் இரா. சுவாமிநாதன், கல்லூரி முதல்வர் பி.எஸ். ஜோசப், துணை முதல்வர் டி. லீமா பீட்டர், வேளாண் அறிவியல் மைய முனைவர் இரா. மாரிமுத்து, தொழில்நுட்ப நிபுணர் சி. சங்கர், பி. விஜயலட்சுமி, நுண்ணியிரியியல் துறைத் தலைவர் பி. ஆனந்தராஜ், துறைப் பேராசிரியர்கள் எஸ். விமலா காந்தி, கே.எஸ். சண்முகம், பி. மீரா, டி. பிரபாவதி, டி. வள்ளியம்மை மற்றும் நுண்ணுயிரியியல் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**தருமபுரி மாவட்டத்தில் நசிந்து வரும் விவசாயம்**

ஆர். சரவணன்

First Published : 25 Aug 2010 02:29:06 PM IST

தருமபுரி, ஆக. 24: தருமபுரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்து வருவதாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதாலும் விளைநிலங்களை வீட்டுமனைகளுக்காக விவசாயிகள் விற்கும் போக்கு அதிகரித்துள்ளது.

மாவட்டத்தின் முக்கியத் தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. இந்நிலையில், 2008-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாவட்டத்தில் 1.80 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாய சாகுபடி நடைபெற்றது. 2009-ம் ஆண்டு வேளாண் செய்யப்படும் பரப்பளவு 1 லட்சம் ஹெக்டேருக்கும் குறைவாக உள்ளது.

3 ஆண்டுகளாக தொடர்ந்து பருவமழை பொய்த்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் 30 அடிக்கு கீழே சென்றுள்ளது. இதனால் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வேலைத் தேடி அண்டை மாநிலங்களுக்கு செல்லும் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களை வீட்டுமனைகளை விற்பனை செய்யும் ரியல் எஸ்டேட் தொழில் புரிவோரிடம் குறைந்த விலைக்கு விற்கும் சூழல் நிலவுகிறது.

போதிய மழை இல்லாமல் போவது, வேலைத் தேடி அண்டை மாநிலத்திற்கு செல்வது போன்ற காரணங்களால் 26 சதவீதம் விவசாய நிலங்கள் தரிசாக உள்ளன. ஆண்டுதோறும் நல்லம்பள்ளி, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களில் சராசரியாக 12 ஏக்கர் விளைநிலங்கள் வீட்டுமனைக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

வீட்டுமனைகள் விற்பனை செய்வோர், விவசாயிகளிடம் ஒரு ஏக்கர் நிலத்தை ரூ.30 லட்சத்திற்கு வாங்கி, வீட்டுமனைகளாக ரூ.1.5 கோடிக்கு விற்பனை செய்கின்றனர்.

மாவட்டத்தில் அதிக அளவு விவசாயம் நடைபெறும் பாலக்கோடு, நல்லம்பள்ளி, பென்னாகரம் சாலை, மொரப்பூர் சாலை மற்றும் தருமபுரி ஒன்றியத்தில் நடப்பாண்டில் மட்டும் சுமார் 200 ஏக்கர் விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தருமபுரி மாவட்ட நிலஅளவையர் கோவிந்தன் தெரிவித்தார்.

விவசாய நிலங்கள் தொடர்ந்து வீட்டுமனைகளாக மாற்றப்படுவதால், மாவட்டத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி குறைந்து, விவசாயம் வெகுவாக பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

காரணம் என்ன

தருமபுரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்துவந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள், அதிகரித்துவிட்ட விலைவாசி மற்றும் வேளாண் தொழிலில் போதிய வருவாய் இன்மை ஆகியவற்றால் அண்டை மாநிலமான கர்நாடகாவுக்கு வேலைத் தேடி செல்கின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலர் எம். ஆறுமுகம் கூறியது:

மாவட்டத்தில் அதிக அளவு விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் முகவர்களின் கையில் உள்ளது. விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு நிலங்களை வாங்கி, வீட்டுமனை போட்டு அதிக லாபம் ஈட்டுகின்றனர்.

கேரளத்தில் இருப்பதுபோல், விவசாய நிலங்களை வீட்டுமனைகளுக்கு விற்கத் தடை செய்யும் சட்டத்தை தமிழகத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றார்.

விவசாயிகளுக்கு தேவையான அனைத்து பயிர் மற்றும் வேளாண் கருவி கடனுதவிகளை உடனுக்குடன் வழங்கி அவர்கள் விவசாயத்தை தொடர ஊக்கமளித்தால் நிலைமை மாறலாம்.

**வேளாண் சார்ந்த தொழிலகங்களை உருவாக்கக் கோரிக்கை**

First Published : 25 Aug 2010 12:58:05 PM IST

திருவாரூர், ஆக. 24: திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் சார்ந்த தொழிலகங்களை உருவாக்கி, இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் நடைபெற்ற அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், படித்த இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் வெளி மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் வேலை தேடிச் செல்லும் இளைஞர் மற்றும் இளம் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இந்த அவலத்தைப் போக்கும் வகையில், அரசே சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுப்பேற்று சிறு, குறுந் தொழில்களை உருவாக்க வேண்டும். ஓ.என்.ஜி.சி. ஆய்வு செய்த இடங்களில் வீணாக எரிந்து கொண்டிருக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி தொழில்சாலைகளை உருவாக்க வேண்டும்.

கிழக்குக் கடற்கரை சாலையில் பெரும்பாலான பணிகள் முடிந்து விட்ட நிலையில், சில இடங்களில் கட்டப்படாமல் உள்ள பாலங்களை விரைந்து முடித்து, சாலையை முழுப் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்.

செப்.2 முதல் 4-ம் தேதி வரை கோவையில் நடைபெறவுள்ள இளைஞர் பெருமன்றத்தின் மாநில மாநாட்டுக்கு 100 பேருந்துகளில் இளைஞர்கள், இளம் பெண்கள் சென்று பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டுக்கு மாவட்டத் தலைவர் பி. நாகேஷ் தலைமை வகித்தார். மாநிலச் செயலர் த. லெனின் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசினார். இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலர் த. லெனின் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன், பெருமன்ற மாவட்டச் செயலர் கு. ராஜா, பொருளாளர் எம்.

செந்தில்நாதன், மாவட்ட துணைத் தலைவர் எஸ். பாஸ்கர், மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலர் சு. பாலசுப்பிரமணியன், ஒன்றிய, நகரப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

**பயிர்க் கடனாக ஏக்கருக்கு ரூ. 10,000 வழங்க வேண்டும்: விவசாயிகள்**

First Published : 25 Aug 2010 12:55:56 PM IST

நாகப்பட்டினம், ஆக 24: கூட்டுறவு பயிர்க் கடனாக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ச. முனியநாதன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் வை. ராஜேந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் விஸ்வநாதன், வேளாண் இணை இயக்குநர் கருணாகரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயிகளின் விவாத விவரம்:

ஆர். கோதண்டராமன்: சீர்காழி வட்டம், புதுமண்ணியாறு வடிகால், கிட்டியணை வடிகால் ஆகியவை இணையும் பகுதியில் ஷட்டர் கட்ட வேண்டும்.

எம்.எஸ். முஜீபுஷரீக்: திருப்பூண்டி வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கிக்கு நிரந்தர கட்டடம் கட்டித் தர வேண்டும். அரிச்சந்திரா ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தட்டி வலைகள், மண் மூட்டைகளை அகற்ற வேண்டும்.வி. சரபோஜி: அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவு கடனாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரம் அளிக்க வேண்டும். முறைவைக்காமல் தண்ணீர் திறந்து விட வேண்டும்.சோமு. இளங்கோ: நவீன கருவிகளின் உதவியுடன் காணாமல் போன கிணறுகள், குளம், ஏரி உள்ளிட்ட நீர் நிலைகளை கண்டறிந்து, அவற்றை பராமரிக்க வேண்டும். திண்டுக்கல் மாவட்டத்தில் இது போன்ற நடைமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதால் உபரிநீரை கூடுதலாக பாதுகாக்க முடியும்.ஆ. அலெக்சாண்டர்: மயிலாடுதுறை வேளாண் மையத்தில் பி.பி.டி. 5204 ரக நெல் விதைகளின் இருப்பு குறைவாக உள்ளது. அனைத்து மையத்திலும் இந்த ரக நெல் விதைகளை கூடுதலாக வழங்க வேண்டும்.

கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் எஸ். சம்பந்தம் உள்ளிட்ட பல்வேறு விவசாயிகளும் கோரிக்கைகள் குறித்து பேசினர்.

**மரவள்ளிக் கிழங்கை தாக்கும் மர்மப் பூச்சிகள்**

First Published : 26 Aug 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம்,: காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள மரவள்ளிக் கிழங்குகள், மாவுப் பூச்சிகளின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டுமல்ல, விழுப்புரம், கடலூர் போன்ற மாவட்டங்களிலும் இப் பூச்சிகளின் தாக்கம் இருப்பதாக விவாசயத் துறை

அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.இந்த மாவுப் பூச்சியின் தாக்கம் அனைத்துப் பயிர்களையும் பாதிக்கிறது. இந்த பூச்சியின் இளங்குஞ்சுகள் மரவள்ளியில் உள்ள காய்ந்த இலைகளில் இருக்கும். பின்னர் இவை வளரும்போது மரவள்ளிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் விவசாயத் துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைக் கட்டுப்படுத்தும் விதம் குறித்து விவசாயத்துறை அலுவலர்கள் கூறியது: பாதிக்கப்பட்ட பயிரின் பாகத்தை உடனே நீக்க வேண்டும். வரப்புகளில் தடுப்பு பயிர்களான மக்காச்சோளம், கம்பு ஆகியவற்றை வளர்க்க வேண்டும். நிலத்தின் மேற்பரப்பில் குளோர்பைரிபாஸ் மருந்தை தெளிக்க வேண்டும்.என்று வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் தலைமையில் பசுமை ராணுவம்!**

த.தேவராஜ்

First Published : 26 Aug 2010 12:00:00 AM IST



செம்மை நெல் சாகுபடியில் தயாரிக்கப்பட்ட பாய் நாற்றங்கால்.

கடலூர்: வேளாண் பணிகளில் பசுமை ராணுவம் என்ற புதிய அமைப்பு தமிழகத்தில் தொடங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் வேளாண் பொருள்கள் உற்பத்தி குறைந்து வருகிறது. கூலியாள் பற்றாக்குறை, உற்பத்திப் பொருள்களுக்கு உரியவிலை கிடைக்காமை, இயற்கை இடர்பாடுகள் போன்றவற்றால், விவசாயத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள் கூட அதை விட்டு வெளியேறவும், அதை உபதொழிலாக மேற்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறர்கள்.

இந்நிலையில் நவீன வேளாண்மையும், இயந்திர மயமாதலும் இன்றியமையாத் தேவையாகி வருகிறது. இயந்திரங்களின் அதிகப்படியான விலையும், தொழில்நுட்பமும், விவசாயிகள் இயந்திரங்களைப் பயன்படுத்த தடைக் கற்களாக உள்ளன. இந்நிலையைப் போக்க நவீன தொழில்நுட்பத்துடன் வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளைக் கொண்ட பசுமை ராணுவம் என்ற அமைப்பு தமிழகத்தில் கூட்டுறவுத்துறை மூலமாக உருவாக்கப்பட்டு வருகிறது.

நாட்டு மக்களைக் காப்பதற்கு ராணுவம் இருப்பதுபோல், வேளாண்மையைப் பாதுகாக்க பசுமை ராணுவம் தொடங்கப்பட்டு இருக்கிறது. ராணுவ வீரர்கள் வேறுயாரும் அல்ல,

விவசாயிகளேதான். தமிழகத்தில் முதல் முறையாக நாகை மாவட்டத்தில் தொடங்கிய இத்திட்டம் தற்போது கடலூர் மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. கடலூர் மாவட்டத்தில் 6 தொடக்கக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு, உழவுக்குப் பயன்படும் ரோட்டாவேட்டர், பவர் டில்லர், மின் டிராக்டர், நாற்று நடவு இயந்திரம், பூச்சிமருந்து தெளிக்கும் இயந்திரம் உள்ளிட்ட வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு உள்ளன.

ஒரு கூட்டுறவு சங்கத்துக்கு தலா 4 விவசாயிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். அவர்கள்தான் பசுமை ராணுவத்தினர். இவர்களுக்கு தனிச் சீருடைகள் வழங்கப்பட்டு, வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கு தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலத்தைப் பண்படுத்துதல், செம்மை நெல் சாகுபடி முறையில் நாற்றங்கால் (பாய் நாற்றங்கால், தட்டு நாற்றங்கால், மரச்சட்ட நாற்றங்கால், தெளிப்பு நாற்றங்கால்) தயாரித்தல், நாற்று நடவு செய்தல் போன்றவற்றில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து கீழ மூங்கிலடி கிராமத்தில் களப் பயிற்சியும், கடலூரில் வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பழுது பார்த்தல் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பயிற்சி பெற்ற பசுமைப் படையினர் தங்களது சேவைப் பகுதிகளில், அழைக்கும் விவசாயிகளுக்கு, இயந்திரங்களுடன் சென்று, நிலத்தைப் பண்படுத்துதல் முதல் நாற்று நடவு வரையிலான வேளாண் பணிகளைச் செய்து கொடுப்பார்கள். இப் பணிகளுக்கான கூலி, ஊக்கத் தொகையாகவும், வாடகையாகவும் வழங்கப்படும். இதில் ஊக்கத் தொகை பசுமைப்படை விவசாயிக்கும், வாடகை கூட்டுறவு சங்கத்துக்கும் கிடைக்கும்.

இப்பயிற்சியை பார்வையிட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் இரா.ராஜேந்திரன் கூறுகையில், ""வேளாண்மையைப் பாதுகாக்க விவசாயிகளைக் கொண்ட ராணுவம் அமைக்கப்பட்டு உள்ளது. வேளாண்மையில் உள்ள இடையூறுகளைப் போக்க மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையால், நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் எளிதாகப் பயன்படுத்த முடியும், வேளாண் செலவுகள் குறையும்" என்றார்.

பயிற்சியில் பங்கேற்ற உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""பசுமை ராணுவம் திட்டம் சிறந்த வேளாண் திட்டமாகத் தெரிகிறது. இயந்திரங்கள் இன்றி, கூலியாள்களை பயன்படுத்தி நிலத்தைப் பண்படுத்துதல், நாற்றங்கால் தயாரித்தல், நாற்று நடுதல் உள்ளிட்ட பணிகளுக்கு ஏக்கருக்கு | 3 ஆயிரம் முதல் | 5 ஆயிரம் வரை செலவாகும், ஆனால் பசுமை ராணுவம் திட்டத்தில் ஏக்கருக்கு | 1,800தான் செலவாகிறது.

வேளாண் பணிகளுக்கு உதவுவதற்காக கூட்டுறவுத் துறை மூலம் கடலூர் மாவட்டத்தில், 400 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்தக் குழுக்களுக்கும் வேளாண் கருவிகளை மானிய விலையில் வழங்கி பயிற்சி அளிக்க வேண்டும்" என்றார்.

தினமலர்

**இயந்திரங்கள் வரத்து, ஆட்கள் பற்றாக்குறை : விடை பெறும் நிலையில் வேளாண் கருவிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:51 IST

மேட்டூர்: மாற்று தொழில் செல்லும் விவசாய கூலியாட்கள், இயந்திரங்கள் வரத்து காரணமாக காலம் காலமாக விவசாயிகள் பயன்படுத்திய வேளாண் கருவிகள் விற்பனை குறைந்து, விரைவில் விடைபெறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
ஆண்டுதோறும் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடியை துவங்குவர். அதற்காக நிலத்தை சீர் செய்ய மம்பட்டி, கலப்பை, கத்தி, அரிவாள் போன்ற வேளாண் கருவிகளை வாங்குவது வழக்கம். சாகுபடி சமயத்தில் வேளாண் கருவிகள் விற்பனை அதிகமாக இருக்கும் என்பதால், வியாபாரிகள் பலர் கிராம சந்தைகளில் வேளாண் கருவிகளை விற்பனை செய்வர். சமீபகாலமாக சந்தைகளில் வேளாண் கருவிகள் விற்பனை வெகுவாக குறைந்து விட்டது வியாபாரிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.
ஜலகண்டபுரத்தில் வேளாண் கருவிகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் கூறியதாவது: முன்பு தென்மேற்கு அல்லது வடகிழக்கு பருவமழை சீஸனில் மம்பட்டி, அரிவாள், களைவெட்டி, ஏர் கலப்பை போன்றவற்றை விவசாயிகள் அதிக அளவில் வாங்கி செல்வர். சமீபகாலமாக ஏர் உழுவதற்கு, களை எடுப்பதற்கு, நாற்று நடுவதற்கு என தனித்தனியாக இயந்திரங்கள் வந்து விட்டன.
தவிர, விவசாய தொழிலாளர்கள் பலர் மாற்று வேலைக்கு சென்று விட்டனர். விவசாய தொழிலாளர்கள் காலம் காலமாக பயன்படுத்திய மம்பட்டி, கலப்பைகளின் உபயோகம் படிப்படியாக குறைந்து வருகிறது. அதற்கேற்ப விற்பனையும் மூன்றில் ஒரு பங்காக குறைந்து விட்டது. நாங்கள் பல தலைமுறையாக வேளாண் கருவிகளை விற்பனை செய்கிறோம். ஆண்டுதோறும் கருவிகள் விற்பனை குறைந்து கொண்டே வருவதால், எங்கள் வாரிசுகள் மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். வரும் காலத்தில் பழமையான வேளாண் கருவிகள் விற்பனை மேலும் குறையும், என்றனர்.

**வேளாண் ஆராய்ச்சி நிலைய தென்னை மரங்கள் ஏலம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:50 IST

சேலம்: வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராமமூர்த்தி வெளியிட்ட அறிக்கை:
பவானிசாகரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலையின் கீழ் இயங்கும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள ஐந்து பண்ணைகளில் 2,409 தென்னை மரங்கள் உள்ளன.

தென்னை மரங்களில் மேல் பலாபலன்களை அனுபவித்துக் கொள்ள ஆண்டுதோறும் ஏலம் விடப்படுகிறது. 2011ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதி வரை தென்னை மரங்களின் மேல் பலாபலன்கள் அனுபவிக்கும் உரிமத்திற்கான ஏலம் நடத்தப்பட உள்ளது. அதற்கான முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகிறது.
முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் வரும் 27ம் தேதி வரை பெறப்பட்டு, அன்று பிற்பகல் ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏலம் எடுக்க விருப்பம் உள்ளவர்கள் முன்வைப்பு தொகையாக 2,000 ரூபாய் செலுத்தி ஏலத்தில் பங்கேற்கலாம். தென்னை மரங்களை அலுவலக வேலை நாட்களில் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிடலாம். மேலும் விபரங்களுக்கு 04295-240244 என்ற ஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வங்கிக்கடனை விவசாயிகள் திருப்பிசெலுத்த கலெக்டர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:31 IST

தர்மபுரி: ""மனசாட்சிக்கு பயந்து விவசாயிகள் வங்கிக்கடன்களை திருப்பி செலுத்த வேண்டும்," என, விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் கலெக்டர் அமுதா தெரிவித்தார்.தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் அமுதா தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், "தோட்டக்கலை பயிர்களுக்கு மின்சார கட்டணத்தில் சலுகை அளிக்க வேண்டும். விவசாயிகளின் குழந்தைகளுக்கு 2009ம் ஆண்டுக்கு முன் பெற்ற கல்விக்கடன் வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சி காலத்தில் விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எடுக்க கூடாது' என, வலியுறுத்தினர்.

விவசாயிகளுக்கு பதிலளித்து பேசிய கலெக்டர் அமுதா, ""பொதுமக்கள் போலியான தகவல்களை நம்பி பணத்தை வங்கியில் செலுத்தி ஏமாறக்கூடாது. விவசாயி கடன் பெற்ற விவசாயிகள் மனசாட்சிக்கு பயந்து தங்களுடைய கடன்களை திருப்பி செலுத்த வேண்டும். தள்ளுபடி கிடைக்கும் என நம்பி தவனை செலுத்தாமல் ஏமாற்ற கூடாது," என்றார்.டி.ஆர்.ஓ., மகேஸ்வரி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியம், ரிசர்வ் வங்கி துணை பொது மேலாளர் விஜய், இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் சடகோபன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கரும்பு பயிரில் வேர் புழு தாக்குதல் இழப்பீடு வழங்க குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,03:21 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேர் புழு தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள கரும்பு விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கிட வேண்டும்' என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரபாகர், வேளான் உதவி இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:

கண்ணு (மாவட்ட செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பை துணை தொழிலாக கொண்டுள்ளதால் வனப்பகுதிகளில் கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை பட்டி போட்டு மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்க வேண்டும்.

டி.ஆர்.ஓ., பிரபாகர்: வனப்பகுதிகளில் வெள்ளாடுகளை தவிர மற்ற கால்நடைகளை மேய விட வனத்துறையினர் அனுமதி வழங்கி வருகின்றனர். வனப்பகுதியில் பட்டி போட்டு கால்நடைகளை குறிப்பாக ஆடுகளை மேய விட அனுமதி வழங்க முடியாது.

சக்கரவர்த்தி: நெடுங்கல் அணைகட்டில் இருந்து பாரூர் ஏரிக்கு தண்ணீர் செல்லும் பிரதான கால்வாயில் 140க்கும் மேற்பட்ட இடங்களில் ஆயில் இன்ஜின் கொண்டு தண்ணீர் இறைக்கப்படுவதால், பாரூர் ஏரி பாசனம் மற்றும் திருவணப்பட்டி, புலியூர் ஏரி பாசன கடைமடை விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை பொதுப்பணித்துறையினர் தடுத்து நிறுத்த வேண்டும்.

டி.ஆர்.ஓ., பிரபாகர்: பொதுப்பணித்துறையினர் கால்வாய் நெடுகிலும் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு கால்வாயில் வைத்துள்ள ஆயில் இன்ஜின்களை பறிமுதல் செய்யப்படும். இதற்கு அந்தந்த பகுதி விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிருஷ்ணன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறிப்பாக காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதியில் சுமார் 300 ஏக்கரில் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிரில் தற்போது அறுவடைக்கு தயாராக இருக்கும் நிலையில் வேர் புழுக்கள் தாக்குதல் அதிகஅளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் கரும்பு பயிர் கடுமையாக சேதமடைந்துள்ளது. சேதமடைந்த விவசாயிகளுக்கு பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வேர் புழு தாக்குதல் குறித்து வேளாண் துறை மூலம் சர்வே செய்யப்படும். மேலும் காலதாமதம் செய்யாமல் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக கரும்பு வெட்ட ஆர்டர் வழங்கப்படும். நோய் தாக்குதலால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு

சர்க்கரை ஆலை மூலம் இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும்.

ராமகவுண்டர்: தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கும்மனூர்- ஒம்பலக்கட்டு இடையே பாலம் இல்லாததால் விவசாயிகள் 15 கி.மீ., சுற்றி வந்து விவசாயம் செய்யும் நிலை உள்ளது. உடனடியாக அந்த பகுதியில் தரைப்பாலம் கட்ட வேண்டும்.

கலெக்டர் அருண்ராய்: வரும் நிதியாண்டில் நபார்டு வங்கி மூலம் அந்த பகுதியல் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.90 லட்சம் நிதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,03:30 IST

பொள்ளாச்சி: ""ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விழிப்புணர்வு ஏற்படுத்த, கோவை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டுக்கு 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது," என்று வேளாண்மை இணை இயக்குனர் நடராஜன் கூறினார். பொள்ளாச்சியில் வேளாண் துறை மற்றும் வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் மாவுப்பூச்சி பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பொள்ளாச்சி தெற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் பயிற்சியின் நோக்கம் குறித்தும், ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் ராஜமாணிக்கம் மாவுப்பூச்சி தாக்குதல் பற்றியும், தடுப்பு நடவடிக்கை பற்றியும் பேசினர்.

கோவை வேளாண்மை இணை இயக்குனர் நடராஜன் பேசியதாவது: கோவை மாவட்டத்தில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. பருத்தி, கொய்யா, மரவள்ளி, மல்பெரி, பப்பாளி உள்ளிட்ட பயிர்களை மாவுப்பூச்சிகள் அதிகம் தாக்கியுள்ளது. வேளாண் துறை சார்பில் கிராம அளவில் பயிற்சி முகாம்கள் நடத்தி மாவுப்பூச்சி தாக்கம் பற்றி தெரிவிக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தி மாவுப்பூச்சி தாக்குதல் தடுக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் 12 வட்டாரத்திலும், திருப்பூர் மாவட்டத்தில் 7 வட்டாரத்திலும் சேர்த்து 19 வட்டாரங்களில் மாவுப்பூச்சி தாக்குதல் கண்டறியப்பட்டது.

அதில், அன்னூர் வட்டாரத்தில் இரண்டு கிராமத்திலும், அவிநாசி வட்டாரத்தில் இரண்டு கிராமத்திலும் 6,100 ஏக்கரில் மாவுப்பூச்சி தாக்கம் அதிகமாக இருந்தது. மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதையும் அன்னூர், அவிநாசி வட்டாரத்தில் மொத்தம் நான்கு கிராமங்களுக்கு செலவிடப்பட்டது. விவசாய பகுதியிலும், விவசாயம் அல்லாத ரோட்டோர பகுதியிலும் மொத்தம் ஒரு கோடி ரூபாய் நிதியில், உயிரியல் கட்டுப்பாடு முறைகளும், ரசாயன கட்டுப்பாடு முறைகளும் கையாளப்பட்டு மாவுப்பூச்சிகள் அழிக்கப்பட்டுள்ளது. ரசாயன கட்டுப்பாடு முறையால், நன்மை செய்யும் இரைவிழுங்கும் பூச்சிகளும் பாதிக்கப்படுகின்றன.

அதனால், விஞ்ஞானிகள் ஆய்வு செய்து மாவுப்பூச்சிகளை உணவாக உண்ணும் இரைவிழுங்கி பூச்சிகளை அதிகமாக உற்பத்தி செய்துள்ளனர். ரசாயன முறையை கையாளாமல், உயிரியல் முறையை கடைபிடிக்க  விவசாயிகளுக்கு விழிப்புணர்வு  ஏற்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டுக்கு ஆத்மா திட்டத்திற்கு 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை கொண்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி, செயல்விளக்க திடல், தொழில்நுட்ப சுற்றுலா, விவசாயிகள்- விஞ்ஞானிகள் ஆலோசனை கூட்டம், விவசாய பொருட்காட்சி போன்றவை நடத்தப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் ஏழு துறைகளை உள்ளடக்கி ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாய பொருட்காட்சி வரும் டிசம்பர் மாதம் மூன்று நாட்களுக்கு பொள்ளாச்சியில் நடக்கவுள்ளது. இவ்வாறு, இணை இயக்குனர் பேசினார். பொள்ளாச்சி வடக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ், ஆத்மா திட்ட வட்டாரக்குழு தலைவர்கள் கிருஷ்ணகுமார், சிவன்மலைசாமி, முத்துசாமி, பொள்ளாச்சி தெற்கு, வடக்கு மற்றும் ஆனைமலை பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் நிர்மலா, அசோகன், துணை வோளண்மை அலுவலர்கள்,  உதவி வேளாண்மை அலுவலர்கள்  செய்திருந்தனர்.

**பூண்டு விளைச்சல் குறைவால்; அதிகரித்து வருகிறது விலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:03 IST

திருப்பூர்: பூண்டு விளைச்சல் குறைந்திருப்பதால், கடந்த ஒரு மாதமாக விலை அதிகரித்து வருகிறது. முகூர்த்த நாட்களை தவிர, மற்ற நாட்களில் எதிர்பார்த்த அளவு பூக்கள் விற்பனை இல்லை என பூ வியாபாரிகள் கவலையுடன் தெரிவித்தனர். திருப்பூர் மார்க்கெட் நிலவரம்: முட்டை விற்பனை சுமார்: முட்டை வியாபாரி கணேஷ் கூறுகையில்,  ""முட்டை விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கொள்முதலில் 2.30 ரூபாய்; மொத்த விற்பனை 2.35; சில்லரையில் 2.50 முதல் 2.75 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

விற்பனை சுமாராக உள்ளது. இதே விலை நீடிக்க வாய்ப்புள்ளது,'' என்றார். பருப்பு விற்பனை அமர்க்களம்: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""பருப்பு விலையில் அதிகளவில் மாற்றம் ஏற்படவில்லை. மூகூர்த்த நாட்களில் மட்டும் விற்பனை நன்றாக உள்ளது. துவரம் பருப்பு கிலோ 55 ரூபாய்; பாசி பயறு 64; பாசி பருப்பு 80; உருட்டு உளுந்து 80; கருப்பு உளுந்து 70; கொள்ளு 25; தட்டப்பயறு 36; சுண்டக்கடலை 35 ரூபாய்க்கு விற்பனையாகிறது,'' என்றார். பூண்டு விலை உயர்வு: பூண்டு வியாபாரி குமார் கூறுகையில், ""பூண்டு விளைச்சல் குறைந்திருப்பதால், கடந்த ஒரு மாதமாக விலை அதிகரித்து வருகிறது.

நாட்டு பூண்டு கிலோ 95 முதல் 110 ரூபாய் வரை விற்றது; கிலோ 120 முதல் 140 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இமாச்சலபிரதேச பூண்டு கிலோ 190 முதல் 210 ரூபாயில் இருந்து 200 முதல் 220 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ஊட்டி பூண்டு, குஜராத் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு அதிகளவில் செல்கிறது; கிலோ 150 முதல் 220 ரூபாய் வரை விற்கிறது. வரும் நாட்களில் விலை

குறைய வாய்ப்பு இல்லை," என்றார். சமையல் ஆயில் விற்பனை குறைவு: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""சூரியகாந்தி எண்ணெய் விலை குறையும் வாய்ப்புள்ளது. இதர எண்ணெய் விலை குறைவதற்கான வாய்ப்பு இல்லை. எதிர்பார்த்த விற்பனை இல்லை. ரீபன்ட் ஆயில் 104; கடலை எண்ணெய் 94; நல்லெண்ணெய் 82; தேங்காய் எண்ணெய் கிலோ 68 ரூபாய்; சூரியகாந்தி எண்ணெய் 70; விளக்கெண்ணெய் 92; பாமாயில் 50; நெய் கிலோ 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

மல்லிகை கிலோ ரூ.200: பூ வியாபாரிகள் சங்க தலைவர் சண்முகம் கூறுகையில், ""முகூர்த்த நாட்களை தவிர, இதர நாட்களில் விற்பனை எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. பூக்களின் வரத்து குறைந்துள்ளது; லோக்கல் பூக்களின் வரத்து இல்லை. மல்லிகை பூ கிலோ 200 ரூபாய்; கனகாம்பரம் 160; சம்பங்கி 40; பட்டுப்பூ 30; ஜாதிமுல்லை 160; முல்லை 160; ரோஸ் 120; மாலை சிறியது 40, பெரியது 150 ரூபாய் என, விற்பனை செய்யப்படுகிறது," என்றார்.

**சோளம் விற்பனை உயர்வு; பருத்தி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,01:58 IST

திருப்பூர்: மழை காரணமாக, திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், சோளம் விற்பனை ஒரு மடங்கு அதிகரித்தது; பருத்தி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் பரிமளம் கூறியதாவது: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சோளம் 310 குவிண்டால்; கம்பு 25; ராகி 15; வரமிளகாய் 43; பருத்தி 31 குவிண்டால் விற்பனையானது. சோளம் 1,000 முதல் 1,300 ரூபாய் வரை; கம்பு 1,000 முதல் 1,050 வரை; ராகி 900 முதல் 1,000 வரை; வரமிளகாய் 3,000 முதல் 5,500 வரை; பருத்தி 3,800 முதல் 3,910 ரூபாய் வரை விற்றது.
பருத்தி ஏலத்தில் 17 விவசாயிகள், ஐந்து வியாபாரிகள் பங்கேற்றனர். கடந்த வாரத்தில் 155 குவிண்டால் சோளம் விற்றது; மழை காரணமாக, இந்த வாரம் ஒரு மடங்கு விற்பனை அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் மழை பொழிவு இருந்தால், விற்பனை அளவு அதிகரிக்கும். பருத்தி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த இரண்டு வாரங்களாக, குவிண்டால் 3,680, 3,780 என்ற விலையில் விற்பனையானது; இந்த வாரம் 3,910 ரூபாயாக உயர்ந்தது. வரும் வாரத்தில் தொடர்ந்து விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது, என்றார்.

**உழவு செய்ய வேளாண் துறை யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2010,02:16 IST

திருப்பூர்: தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி உழவு செய்யவும், நிலக்கடலைக்கு உரம் அளிக்கவும், வேளாண் இணை இயக்குனர் முத்துசாமி அறிவுறுத்தியுள்ளார். மாநிலம்

முழுவதும் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. வறட்சியை தணிக்கும் வகையில், திருப்பூர் மாவட்டத்தில் 80 மி.மீ., மழை கிடைத்துள்ளது. மழையை பயன்படுத்தி பயிரிட, விதைப்புக்கு முன் உழவு செய்து நிலத்தை பக்குவப்படுத்த வேண்டும்; ஆவணி பட்ட பயிர்களின் விளைச் சலில் நல்ல பலனை எதிர்பார்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நிலக் கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள், மழையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. திருப்பூர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை கிடைத்துள்ளது. ஆவணி பட்டத்தில் பயிர் செய்யும் விவசாயிகள், விதைப்புக்கு முன் உழவு செய்ய தக்க தருணம். நிலத்தில் உள்ள களைகளை அகற்றுதல்; வரும் நாட்களில் அதிகளவிலான மழை நீரை உறிஞ்சும் வாய்ப்பு உருவாகும். கரிசல் மண் மற்றும் செம்மண் நிலங்களில் சோளம், பயறு வகைகளை மானாவாரியாக பயிர் செய்வர். பாசன வசதி பெற்ற உடுமலை மற் றும் குடிமங்கலம் வட்டாரங்களில் மானாவாரியாக மக்காச்சோளம் பயிரிடுதல்; கொண்டைக்கடலை, மொச்சை பயறுகளும் விதைப்பர். இவர்கள் விதைப்புக்கு முன் உழவு செய்தல் அவசியம்.

காங்கயம், வெள்ளகோவில் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் நிலக்கடலை பயிர் செய்யப் பட்டுள்ளது. நிலக்கடலைக்கு "ஜிப்சம்' உரம், பயிரிடுவதற்கு முன்னும், பின்னும் அளிக்க வேண்டும். வளர்ச்சி நிலையில் இருக்கும் செடிக்கு, மழைக்காலத்தில் "ஜிப்சம்' அளிப்பது நல்லது; பொக்கு காயினை தவிர்த்து, அதிக மகசூல் கிடைக்கும். ஏற்கனவே, அடி உரம் அளித்தவர்கள், ஹெக்டருக்கு 200 கிலோ வீதம் அளிக்க வேண்டும்; பயிரிடுவதற்குமுன் ஜிப்சம் அளிக்காதவர்கள், ஹெக்டருக்கு 400 கிலோ வரை உரம் கொடுக்கலாம். மாவட்டம் முழுவதும் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில், தேவையான அளவு ஜிப்சம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள், அந்தந்த பகுதி விரிவாக்க மையங்களில், மானிய விலையில் உரத்தை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு, முத்துசாமி தெரிவித்தார்.

**வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு இயற்கை வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி**

ஆகஸ்ட் 26,2010,00:00 IST

புதுச்சேரி : இயற்கை வேளாண்மை தேசியத் திட்டத்தின் கீழ் வேளாண் விரிவாக் கப் பணியாளர்களுக்கான இயற்கை வேளாண்மை தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நிறைவு விழா நடந் தது. குரும்பாப்பட்டு காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த இந்த விழாவில் விரிவாக்கவியல் நிபுணர் குமார், பயிற்சியின் முக்கியத்துவத்தை கூறினார். உழவியல் நிபுணர் ரொலின் பாஸ்கர் இயற்கை வேளாண்மையின் வழிமுறைகளை விளக்கினார். அங்கக சான்று பெறும் முறைகள் குறித்து கோவை அங்கக சான்றளிப் புத் துறை ஆய்வாளர் சத்தியமூர்த்தி, மண்புழு உரம் தயாரிப்பு முறைகள் பற்றி தவளகுப்பம் சியட் நிறுவன இயக்குனர் கணேஷ், உயிரியல் முறை பயிர் பாதுகாப்பு குறித்து பூச்சியியல் நிபுணர் விஜயகுமார், முட்டைரசம் போன்ற

தாவரக் கரைசல்கள் தயாரிப்பு குறித்து பண்ணை மேலாளர் அமலோற்பவநாதன் பஞ்சகாவ்யம் ஆகியோர் விளக்கமளித்தனர்.

நிறைவு விழாவில் வேளாண் துறை இயக்குநர் சத்தியசீலன், பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் களை வழங்கினார். நிலைய முதல் வர் ராமமூர்த்தி, இயற்கை வேளாண் முறைப்படி கையாளப்படுகின்ற தொழில்நுட் பங்களை விளக்கினார். மேலும், புதுச்சேரி விவசாயிகள் தொழில்நுட்பங்களை மேற்கொள்ள தேசிய தோட்டக்கலை ஆணையம் மற்றும் இயற்கை வேளாண் மைக் கான தேசியத் திட்டம் ஆகியவற் றின் மூலம் அளிக்கப்படுகின்ற நிதி உதவிகள் குறித்தும் விளக்கினார். ஏற்பாடுகளை நிலைய விரிவாக்கவியல் நிபுணர் குமார் செய்திருந்தார்.

**மான்ய விலையில் உபகரணங்கள் விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு**

ஆகஸ்ட் 26,2010,00:00 IST

புதுச்சேரி : வேளாண் துறையில் மானிய விலையில் பவர் டில்லர் வாங்குவதற்கான விண்ணப்பம் பெறும் தேதி 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி அரசின் வேளாண் பொறியியல் துறை துணை இயக்குனர் சோமலிங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "வேளாண் துறையில் மானிய விலையில் பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம், மரபு சார்ந்த மற்றும் மரபு சாரா வேளாண் உபகரணங்கள் வாங்குவதற்கான விண்ணப்பம் பெற்றுக் கொள்ளும் தேதி வரும் 31ம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது' என கூறப்பட்டுள்ளது.

***கொப்பரை தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும்: தென்னை சாகுபடியாளர்களின் கோரிக்கைகள் மீது விரைவில் நடவடிக்கை கருணாநிதி அறிவிப்பு***

*சென்னை, ஆக.26–*

*கொப்பரை தேங்காயை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தென்னை சாகுபடியாளர்களின் கோரிக்கைகள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது;–*

*தென்னை விவசாயிகள்*

தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதியை நேற்று மாலை தலைமை செயலகத்தில் தஞ்சாவூர், திருப்பூர், தேனி, மதுரை, வேலூர், ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலுள்ள தென்னை விவசாயிகள் சார்பில் தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத்தின் தலைவர் டி.ஏ.கிருஷ்ணசாமி, துணைத்தலைவர் பி.கே.ராமணசாமி, செயலாளர் ஆர்.ஏ.சக்திவேல், இணைச் செயலாளர் கே.எம்.தங்கராஜூ, பொருளாளர் பி.கே.குப்புரத்தினம், முன்னாள் எம்.எல்.ஏ. டி.கே.சுப்பிரமணியன், கோவையிலுள்ள தென்னிந்திய தென்னைச் சாகுபடியாளர்கள் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணசாமி கவுண்டர், பி.என்.வேலுசாமி, டி.ரத்தினசபாபதி, ஆர்.ராஜன், கே.முத்துசாமி, கே.செல்வராஜ், எம்.பி.சுப்பிரமணியம், ஈரோடு தென்னை விவசாய நல சங்கத்தின் செயலாளர் மகுடபதி, தஞ்சை தென்னை விவசாய நல சங்கத்தின் தலைவர் கலைச்செல்வன், மதுரை தென்னை விவசாய நல சங்கத்தின் செயலாளர் பிரபு, கவுதமராஜா, திண்டுக்கல் தென்னை விவசாய நல சங்கத்தின் செயலாளர் சரவணன், தர்மராஜ், தேனி தென்னை விவசாய நல சங்கத்தின் தலைவர் பன்னீர்செல்வம், மாயக்கிருஷ்ணன், வேலூர் தென்னை விவசாய நல சங்கத்தின் செயலாளர் வெங்கடேசன் ஆகியோர் சந்தித்தனர்.

கொப்பரை தேங்காய் கொள்முதல்

அப்போது, கேரள மாநிலத்தில் தென்னை விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காயை டன் ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வீதம் கிராம விவசாய வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து அதற்குரிய பணத்தை அந்த சங்கங்களே உடனுக்குடன் விவசாயிகளுக்கு வழங்கிவிடுகின்றன. அதேபோல, தமிழகத்திலும் விவசாயத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கங்கள், டான்பெட் நிறுவனம், இதர விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் டன் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்திட வேண்டும். தென்னையை தோட்டக்கலைத் துறையின்கீழ் சேர்த்திட வேண்டும். தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தென்னை நல வாரியம் ஒன்று புதிதாகத் தொடங்கிட வேண்டும் என்று தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விரைவில் நடவடிக்கை

இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலனை செய்த முதல்–அமைச்சர் கருணாநிதி, கேரள மாநிலத்தில் தென்னை விவசாயிகளிடமிருந்து உரித்த தேங்காயைக் கொள்முதல் செய்வது குறித்த நடைமுறையை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும்; தென்னை நல வாரியம் அமைக்கப்படும் என்றும்; தென்னை விவசாயத்தை தோட்டக்கலைத் துறையின்கீழ் சேர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஊரகத் தொழில் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் பொங்கலூர் ந.பழனிச்சாமி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் க.சண்முகம், வேளாண்மைத்துறை முதன்மைச் செயலாளர்

ராமமோகன்ராவ், கூட்டுறவு மற்றும் உணவுத் துறைச் செயலாளர் சுவரண்சிங், வேளாண்மைத்துறை ஆணையர் கோசலராமன், தமிழ்நாடு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் தனி அலுவலர் சங்கரலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# வேளாண்மை செய்திகள்

# குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் வான்கோழி வளர்ப்பு

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளின் வீட்டு தோட்டங்களில் அதிக அளவில் வான்கோழி வளர்க்கப்படுகிறது. குறிப்பாக தோப்புகள், விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள், தென்னந் தோப்புகளில் வான்கோழி அதிகமாக வளர்க்கப்படுகிறது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் தொழிலாக வான்கோழி வளர்ப்பு விளங்கி வருகிறது.



### வளர்ப்பு முறை

வான்கோழியை புறக்கடை வளர்ப்பு, மிகத்தீவிர முறை அல்லது மேய்ச்சலுடன் கொட்டகையில் வளர்ப்பு, ஆழ்கூள வளர்ப்பு, கம்பி வலை மேல் வான்கோழி வளர்ப்பு ஆகிய 4 முறைகளில் வளர்க்கலாம்.

வீட்டைச்சுற்றி 5 செண்ட் நிலம் இருந்தால் போதும். வான்கோழியை வளர்க்க முடியும். இரவு நேரத்தில் அடை வைத்திட ஒரு சிறிய அறை இருந்தால் போதும். இதே போல் முட்டைகள் இடுவதற்கு ஒரு சிறிய இருட்டான இடம் இருந்தால் போதும் வான்கோழிகளை வளர்க்க முடியும்.

### அடைகாப்பான்

எந்திரங்கள் மூலமாக பொறிக்கப்படும் குஞ்சுகளை கோழிக்குஞ்சு வளர்ப்பது போல் அடைகாப்பான் மூலம் மின்சார குண்டு விளக்கை போட்டு தரையில் உமி இட்டு அதன் மீது குஞ்சுகளை விட்டு காக்கலாம். திறந்த தட்டுகளில் தீவனமும் அதன் அருகில் தண்ணீர் பாத்திரமும் வைக்க வேண்டும். தாய்க்கோழி எந்த அளவுக்கு வெப்பத்தை தன் குஞ்சுகளுக்கு அளிக்கிறதோ அந்த அளவுக்கு செயற்கையாக வெப்பத்தை அளிக்க வேண்டும்.

வான்கோழியை பராமரிக்கும் இடம் தண்ணீர் தேங்காத பகுதியாக இருக்க வேண்டும். தரமான குஞ்சுகளை மட்டுமே பண்ணைகளில் இருந்து வாங்க வேண்டும். குடற்புழு மருந்தை மாதம் ஒருமுறை செலுத்த வேண்டும். இதன் மூலம் உண்ணிகளை கட்டுப்படுத்த முடியும். மேலும் மருந்து கலந்த நீரில் வான்கோழிகளை நனைத்து எடுப்பதன் மூலமும் உண்ணிகளையும் கட்டுப்படுத்தலாம். இறந்து போன வான்கோழி மற்றும் குஞ்சு பொரித்த முட்டைகளை உடனுக்குடன் புதைத்தோ அல்லது எரித்தோ விட வேண்டும்.

### நோய் தாக்குதல்

வான்கோழிகளுக்கு நோய் தாக்குதலுக்கான அறிகுறி தென்பட்டால் உடனே கால்நடை மருத்துவரை அணுகி பரிசோதிக்க வேண்டும்.

குறிப்பாக வான்கோழிகளுக்கு ராணிக்கட் என்ற நோய் தாக்குதல் அதிக அளவில் இருக்கும். அந்த நோய் தென்பட்டால் லசோட்டா அல்லது ஆர்.டி.எப் தடுப்பூ மருந்தை 2 முதல் 7 நாட்களில் கண் அல்லது மூக்கில் 2 சொட்டும், ஆர்.டி.வி.கே என்னும் தடுப்பூ மருந்தை 8-வது வாரத்தில் ஊசி மூலம் அளிக்க வேண்டும். அம்மை நோய் தென்பட்டால் எப்.பி.வி என்ற தடுப்பு மருந்தை ஊசி மூலம் 2 மற்றும் 3-வது வார வயதில் அளிக்க வேண்டும்.

### தீவனம்

வான்கோழிகளுக்கு சிறந்த கலப்பு தீவனம் அளிப்பதன் மூலம் அதிகமான முட்டை மற்றும் இறைச்சிகளை பெற முடியும். ஒரு வருடத்துக்கு 100 முட்டைகள் கிடைக்க வேண்டும் எனில் நல்ல தரமான ஊட்டச்சத்து மிக்க தீவனங்களை இட வேண்டும்.

குறிப்பாக மாவுப்பொருள், புரதம், கொழுப்பு, நார்ப்பொருள், தாது உப்புகள் மற்றும் வைட்டமின் சத்துகள் அடங்கிய தீவனம் அளிக்க வேண்டும்.

ஆண் மற்றும் பெண் வான்கோழிகளுக்கு அதிகமான சத்துகள் தேவை. எனவே குஞ்சு பொறித்தவுடன் தனித்தனியாக பிரித்து வளர்ப்பது நல்லது. குஞ்சு பொறித்த முதல் நாளில் இருந்து கால்சியம், பி-வைட்டமின் மருந்தை தண்ணீரில் கலந்து 2 மாதம் வரை கொடுக்க வேண்டும். சொந்தமாக தீவனம் தயாரிக்கும் போது சந்தையில் கிடைக்கும் தீவனப்பொருட்களை கொண்டு தீவனம் தயாரிக்கலாம்.

### இனப்பெருக்கம்

வான்கோழிகள் முட்டையிட ஆரம்பித்ததில் இருந்து தொடர்ந்து 24 வாரங்கள் வரை முட்டையிடும். போதுமான தீவனம் மற்றும் செயற்கை முறையில் வெளிச்சம் அளிக்கும் போது வான்கோழிகள் ஆண்டு ஒன்றுக்கு 60 முதல் 100 முட்டைகள் வரை இடும். ஒரு வான்கோழி முட்டையின் எடை சராசரியாக 80 கிராம் வரை இருக்கும். 70 சதவீத வான்கோழிகள் முட்டைகளை பிற்பகலில் தான் இடும்.

சராசரியாக 10 முதல் 20 கிலோ எடை உள்ள வான்கோழியை வளர்க்க ஆகும் செலவு ரூ.300-ல் இருந்து ரூ.400 வரை ஆகும். அதே வான்கோழியை விற்பனை செய்வதன் மூலம் ரூ.500-ல் இருந்து ரூ.600 வரை லாபம் பெறலாம்.

# ரத்தசோகை நோய் வராமல் தடுக்கும் 'சாம்பல் பூசனி'

## சாகுபடி முறைபற்றி விவசாயிகளுக்கு விளக்கம்

காய்கறி வகைகளில் ஒன்றான பூசணிக்காய் பல்வேறு சத்துக்களை கொண்டது. கண்ணுக்கு தேவையான பீட்டா கரோட்டின், கொழுப்பு, தாது உப்புக்கள் இதில் உள்ளன. பூசணியின் வகைகளில் ஒன்றான சாம்பல் பூசணியில் இரும்புசத்து அதிக அளவில் உள்ளன. இதை தொடர்ந்து உணவில் சேர்த்துவந்தால் ரத்தசோகை நோய் வராமல் தடுக்கப்படுகிறது.



### சாம்பல் பூசணி சாகுபடி

தற்போது விவசாய நிலங்களில் சாம்பல் பூசணி அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சாம்பல் பூசணி நல்ல ஆழமான இருமண்பாட்டு நிலத்தில் அதிக குளிர்ச்சி இல்லாத மிதமான வெப்பநிலையில் நன்றாக விளையும். சாகுபடி செய்யும் மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்க வேண்டியது அவசியம்.

சாகுபடி செய்யும் போது, ஒரு எக்கருக்கு தேவையான 400 கிராம் விதைகளை கேப்டான் அல்லது பெவிஸ்டின் பூஞ்சாணக்கொல்லி மருந்துகளில் நனைத்து விதைகளை நேர்த்தி செய்ய வேண்டும். பின்பு சம இடைவெளி விட்டு குழிக்கு 5 விதைகள் வீதம் நட வேண்டும்.

### களை கட்டுப்பாடு

விதை நடவு செய்த பின்பு பூவாளியை கொண்டு விதைகளுக்கு நீர் ஊற்ற வேண்டும். அவ்வாறு தண்ணீர் ஊற்றும் போது மண்ணை நீர் அரித்து விடாமல் பார்த்து கொள்ள வேண்டும். செடிகள் நன்கு முளைத்து வரும்போது வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். செடிகள் முளைத்த 10 நாட்களில் ஒவ்வொரு குழியிலும் திடமான 3 செடிகளை மட்டும் விட்டுவிட்டு மற்ற செடிகளை அகற்றிவிட வேண்டும்.

அவ்வாறு செய்தால் உரம் மற்றும் நீர் பற்றாக்குறை செடிகளுக்கு ஏற்படாது. இதனால் செடிகள் நன்கு வளரும். செடிகள் நன்றாக வளர களைகள் அதிகமாக வளராமல் கட்டுப்படுத்த வேண்டும். ஏனெனில் சாம்பல் பூசணி செடிக்கு தேவையான சத்துக்களை களைகள் உறிஞ்சினால் மகசூல் குறைந்து தரமும் பாதித்து விடும்.

### பயிர் பாதுகாப்பு

பயிர்களை நோய் தாக்குதல் இன்றி பாதுகாப்பது தரமான உற்பத்திக்கு மிகவும் அவசியம். எனவே தென்படுகின்ற பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட பயிர்பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும். பூசணி செடியை விதைத்த 3-வது மாதத்தில் இருந்து காய்களை அறுவடை செய்யலாம். சாதாரண வெப்ப நிலையில் காய்களை நல்ல காற்றோட்டமான அறைகளில் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்காமல் இடைவெளியிட்டு சேமிப்பதன் மூலம் 4 முதல் 5 மாதங்கள் வரை காய்களை பாதுகாத்து விற்பனை செய்யலாம்.

**-அகமது கபீர்**, வேளாண் நிபுணர்,
தாராபுரம்.

# வேளாண்மை கேள்வி-பதில்

கேள்வி: தற்போது சிறிய அளவில் ஆட்டுப் பண்ணை வைத்திருக்கிறோம். இதற்கான பசுந்தீவனங்கள் வளர்க்க தேவையான விதைகளை எங்குபெறலாம்? பால்துரை, திருப்பூர்.

பதில்: வேளாண் கல்லூரிகளிலும், கால்நடை அறிவியல் கல்லூரி விரிவாக்க மையங்களிலும் இவற்றை பெற முடியும். இங்கு நேரடியாக சென்று புதியபுதிய தீவனபயிர் ரகங்கள் பற்றியும், அவற்றின் சத்துக்கள் பற்றியும், பயிரிடும் முறை பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். அதன் பிறகு தான் உங்களிடம் இருக்கும் நிலத்தில் எந்த வகையான தீவனத்தை பயிரிட முடியும் என்ற முடிவுக்கு வர முடியும்.

கேள்வி: எருமை இனத்தில் அதிக பால் தரும் ஜாபர்பாடி இனத்தின் தன்மை என்ன? இதை எப்படி அடையாளம் காணலாம்? பவானி, பொள்ளாச்சி.

பதில்: எருமை இனங்களிலேயே இது மிகவும் அதிக எடை கொண்ட இனம். குஜராத் மாநிலத்தில் ஜாபர்பாத் என்ற நகரில் அதிகமாக காணப்படுகிறது. இதன் காதுகள் மற்ற எருமை இனத்தை விட பெரியதாக இருக்கும். இது தான் இதன் முக்கிய அடையாளம். இந்த இன எருமைகள் ஆண்டுக்கு சராசரியாக 2450 லிட்டர் பால் தரும் சக்தி கொண்டவை. ஆனாலும் தற்போது முர்ரா இன எருமைகள் தான் தமிழ்நாட்டின் சூழலுக்கு பொருந்தியதாக வளர்க்கப்பட்டு வருகிறது. எருமை இனங்களில் இதே குஜராத்தில் உள்ள மேசேனா என்ற இனம் தான் அதிக பால் உற்பத்திக்கும், விரைவில் பருமடைவதற்கும் அதிக கன்று உற்பத்தி திறனுக்கும் பெயர் பெற்றதாக இருக்கிறது.

**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு,**
**தினத்தந்தி, கோவை-18.**



**வரத்து அதிகரிப்பால் ஏலக்காய் விலை கிலோ ரூ.1,320–ஆக குறைந்தது**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*கேரளா மற்றும் தமிழ்நாடு ஏல மையங்களில், ஏலக்காய் வரத்து அதிகரித்ததையடுத்து, சென்ற வாரத்தில் இதன் விலை குறைந்து போனதாக ஏலக்காய் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் அமைப்பின் பொது மேலாளர் பி.சி.புனூஸ் தெரிவித்தார்.*

*தரத்தை பொறுத்து, ஒரு கிலோ ஏலக்காயின் விலை ரூ.1,155 முதல் ரூ.1,613 வரை உள்ளது. சென்ற வாரத்தில், சந்தைக்கு 48 டன் ஏலக்காய் வரத்து இருந்தது. இதனையடுத்து, இதன் விலை சராசரியாக ரூ.1,320–ஆக குறைந்துள்ளது.*

*ஏலக்காய் விளையும் பல பகுதிகளில் தட்பவெப்ப நிலை சாதகமாக உள்ளதால், இவ்வாண்டில் ஏலக்காய் உற்பத்தி அதிகரிக்கும் என்பதுடன், சந்தைக்கும் அதிக அளவில் வரத்து இருக்கும் என புனூஸ் மேலும் கூறினார்.*